## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 127/2017**

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02ம் தேதி வெள்ளி கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :சுப்பிரமணி | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ஆறுமுகம் | சமயம் | : |
| கிராமம் | : கடகம்பூண்டி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 52 |

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டடப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் கடகம்பூண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ராஜசேகர் எனக்கு தெரியும். அவர் செஞ்சி கூட்ரோட்டில் உள்ள முனியாண்டி விலாஸ் ஓட்டலில் வேலை பார்த்தவர்.

2. கடந்த 21.08.2015 தேதியன்று, செஞ்சி டு விழுப்புரம் ரோட்டில் அப்பம்பட்டு பஸ் ஸ்டாண்டில் விபத்து நடந்தது. அப்பம்பட்டு அடுத்துதான் எங்கள் ஊர் உள்ளது. விபத்து நடந்த இரவு அன்று செஞ்சியில் இருந்து என் வீட்டிற்கு செல்வதற்காக செஞ்சி கூட்ரோடு அருகே நின்று கொண்டிருந்தேன். அப்போது அந்த வழியாக ராஜசேகர் என்பவர் அவரது இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு அவருக்கு பின்னால் ஒருவர் அமர்ந்துகொண்டு வந்தபோது நான் லிப்ட் கேட்டேன். அவரும் என்னை இருசக்கர வாகனத்திற்கு பின்னால் அமர வைத்து ஓட்டிச்சென்றார். செஞ்சியில் இருந்து அப்பம்பட்டு நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது பின்னால் அதிவேகமாக வந்த கரும்பு ஏற்றிக்கொண்டு இருந்த டிராக்டர் இருசக்கர வாகனத்தில் மோதியது. அப்போது நாங்கள் கீழே விழுந்தோம். கீழே விழுந்ததில் இடது கால் பைக் விழுந்ததில் உள்ளே மாட்டிக்கொண்டு எலும்பு உடைந்தது. மற்றவர்கள் கத்தினார்கள். 108 ஆம்புலன்சில் சிகிச்சைக்கு எடுத்துசென்றார்கள். ராஜசேகர் செஞ்சி அரசு மருத்துவமனையில்

இறந்துவிட்டார். நானும் என்னுடன் வந்தவரும் பாண்டிச்சேரி ஜிப்மர் அரசு மருத்துவமணைக்கு சிகிச்சைக்கு சென்றோம்.அங்கு 19 நாள் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை பெற்றேன். போலிசார் விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை:**

அப்பம்பட்டு பஸ் ஸ்டாண்டில் விபத்து நடந்ததா என்றால் ஆமாம். அந்த இடம் லைட் வெளிச்சமாக இருந்ததா என்றால் லைட் இருந்தது. அப்பம்பட்டு கூட்ரோட்டில் வேகத்தடை உள்ளதா என்றால் அது தெரியவில்லை. இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற ராஜசேகர் மதுபானம் அருந்தியிருந்தார் என்றால் அது தெரியவில்லை. ராஜசேகர் குடித்துவிட்டு ஓட்டிவந்த வாகனத்தில் இரண்டு பேர்களை ஏற்றிக்கொண்டு கட்டுப்பாடின்றி ஓட்டிச்சென்றார் என்றால் சரியல்ல. எனக்கு பைக்கில் கால் மாட்டியதால் தான் அடிபட்டதா என்றால் ஆமாம். விபத்து நடந்தபோது நினைவு இருந்ததா என்றால் நினைவு இருந்தது. மோதிய டிராக்டர் நிற்காமல் சென்றதா என்றால் இல்லை. நின்றது. டிராக்டரில் இருந்தவர்கள் வந்து உதவி செய்தார்களா என்றால் கீழே விழுந்ததில் தெரியவில்லை. நான் கூறுவது போல் பின்னால் வந்து டிராக்டர் மோதவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற ராஜசேகர் கவனக்குறைவால் மோதியதில் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து கொண்டு சென்றபோது டிராக்டர் நான் கூறுவது போல் பின்னால் வந்து மோதியிருந்தால் எனக்கு பலத்த காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் காலில் காயம் ஏற்பட்டது. கரும்பு லோடு டிராக்டர் வேகமாக செல்ல முடியாது என்றால் சரியல்ல. அதில் இருந்த வேகத்தடையில் மோதி இருசக்கர வாகனத்தால் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. விபத்து நஷ்டஈடு வாங்கினேனா என்றால் வாங்கினேன். விபத்து நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

**இல்லை**

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.